**Akhbar** : Malaysia Nanban

**Tarikh** : 18 November 2021

**Muka surat** : 1 & 12

**Tajuk** : Arahan daripada SPRM untuk tidak membuka mulut?

"Duduk diam, tak perlu jadi hero"

Kecoh di Dewan Rakyat

Isu penyelewengan dana MITRA

**Terjemahan** :

Sesi penggulungan Menteri Perpaduan Negara, Datuk Halimah Sadique terganggu seketika apabila beberapa Ahli Parlimen meminta jawapan berhubung isu melibatkan Unit Transformasi Masyarakat India Malaysia (Mitra).

Wakil ahli parlimen parti Pakatan Harapan iaitu RSN Rayar (Jelutong), Wong Kah Woh (Ipoh Timur), dan Kasturi Pattu (Batu Kawan) meminta penjelasan Halimah mengenai siasatan SPRM terhadap MITRA. Halimah menegaskan beliau telah dinasihatkan SPRM untuk tidak menjawab kerana bimbang mengganggu siasatan.

Kekecohan berlaku sebaik Menteri Perpaduan Negara, Datuk Halimah Mohamed Sadique memaklumkan semua tujuh persoalan dibangkitkan ahli Parlimen mengenai isu MITRA tidak dapat dijawab kerana Suruhanjaya Pencegahan Rasuah Malaysia (SPRM) menasihatkan perkara itu tidak dijawab susulan dikhuatiri mengganggu siasatan sedang dijalankan.

Rayer meminta Halimah sebagai menteri tidak perlu takut dan berselindung menggunakan nama SPRM untuk tidak menjawab soalan.

Halimah berkata, beliau tidak takut dengan SPRM dan menegaskan agensi penguat kuasa itu tidak boleh memberi arahan kepadanya, sebaliknya hanya menasihatkan kerana kes berkenaan sedang disiasat.

"Saya tidak takut, tunggu SPRM selesaikan siasatan," katanya. Beliau juga berkata ""Selepas perkara-perkara ini dibangkitkan dalam sesi lepas, kementerian saya telah

menyatakan kerjasama dengan SPRM, kita minta SPRM masuk ke dalam kementerian (untuk) menjalankan siasatan ini."

Bagi meredakan keadaan Timbalan Speaker Datuk Mohd Rashid Hasnon mengeluarkan amaran kepada Rayer dan Kasthuriraani, kerana mencelah sesi penggulungan kementerian itu tanpa keizinannya.

**பேசக்கூடாது என எம்.ஏ.சி.சி. உத்தரவிட்டதா;**

**"பேசாமல் அமருங்கள், ஹீரோவாகும் அவசியம் இல்லை"**




# மக்களவையில் காரசாரமான விவாதம்

## மித்ரா நிதி மோசடி விவகாரம்

கோலாலம்பூர், நவ. 18- மலேசிய இந்தியர் உருமாற்றப் பிரிவான மித்ரா நிதி மோசடிகள் குறித்து மக்களவையில் நேற்று காரசாரமான விவாதம் நிலவியது. எதிர்க்கட்சியினரின் சரமாரியான கேள்விகளுக்கு ஆளான ஒற்றுமைத் துறை அமைச்சர் டத்தோ ஹலிமா சாடிக், தாம் யாருக்கும் பயப்படவில்லை என்றும் கேள்விகளுக்கு ஊழல் தடுப்பு ஆணையம் பதில் சொல்லும் எனவும் கூறினார்.

பக்கம் 12

முதல் பக்கத் தொடர்ச்சி

# மித்ரா நிதி மோசடி விவகாரம்...

மித்ராவில் நிலவுவதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையம் (எம்.ஏ.சி.சி.) தீவிர விசாரணையை முடுக்கி விட்டுள்ளது. அண்மையில் இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு நிறுவனங்களின் இயக்குநர்களை எம்.ஏ.சி.சி. அதிகாரிகள் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நேற்றுக் கூடிய மக்களவைக் கூட்டத்தில் நம்பிக்கைக் கூட்டணியைப் பிரதிநிதிக்கும் ஜெலுத்தோங் தொகுதி உறுப்பினர் ஆர்.எஸ்.எ ன். ராயர், ஈப்போ தீமோர் உறுப்பினர் வோங் கா வோ மற்றும் பத்து கவான் தொகுதி உறுப்பினர் கஸ்தூரி பட்டு ஆகியோர் ஹலிமாவை நோக்கி கேள்விகணைகளை முன்வைத்தனர். எம்.ஏ.சி.சி. இது பற்றிய விசாரணையை மேற்கொண்டு வருவதால் தம்மால் எதுவும் கூற முடியாது என ஹலிமா பதில் சொன்னார்.

எனினும், பதிலுக்கு பதில் கூறிய ராயர், ‘‘எம்.ஏ.சி.சி.யின் பின்னால் ஒளிந்துகொண்டு அமைச்சர் இப்பிரச்சினையைக் கையாள மறுக்கிறாரா? நாடாளுமன்றத்தில் என்ன சொல்ல வேண்டும் என்பதை எம்.ஏ.சி.சி. அவருக்கு உத்தரவிடுகிறதா? இது நாடாளுமன்றத்தைக் கேலிக்கூத்தாக்குவதற்கு சமம்'' என ராயர் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார்.

இதற்கு பதிலடி கொடுத்த ஹலிமா, ‘‘பதில் சொல்ல வேண்டாம் (மித்ராவைப் பற்றி) என எம்.ஏ.சி.சி. எனக்குப் பணிக்கவில்லை. எம்.ஏ.சி.சி. அம்மாதிரி எதையும் பணிக்க முடியாது'' என்றார். பல முறை தம்மை இடைமறித்ததால் அமரும்படி ராயருக்கு அவர் உத்தரவிட்டார்.

‘‘பிறகு ஏன் பயப்படுகிறீர்கள்'' என்று ராயர் மீண்டும் ஹலிமாவை நோக்கி கேட்டார். நான் பயப்படவும் இல்லை, தற்காத்தும் பேசவில்லை. இந்த விவகாரம் முதலில் நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டபோது இது பற்றி விசாரணை செய்வதற்கு எம்.ஏ.சி.சி.யின் உதவியை தமது அமைச்சு நாடியதாக ஹலிமா குறிப்பிட்டார்.

ஆகவே, ‘‘எனக்கு பயமேதும் இல்லை. நாங்கள் எதைச் செய்தாலும் அது சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இருக்கும்'' என்றார் அவர்.

மீண்டும் ராயர் இடைமறித்தார். அரசியல் தலைவர்கள் எவரேனும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனரா என்று திரும்பவும் துருவினார். அதற்கு ஹலிமா ‘‘பேசாமல் அமருங்கள். இங்கு ஹீரோவாகும் அவசியம் இல்லை'' என்று சொன்னார். ராயரின் கேள்விகளுக்கு பதில் சொல்லும் பொறுப்பை எம்.ஏ.சி.சி.யிடமே விட்டு விடுவதாக அவர் தெரிவித்தார்.

ஹலிமாவை இடைமறிக்க முயற்சித்த ராயரை துணை சபாநாயகர் முகமட் ரஷிட் ஹஸ்னோன் எச்சரித்தார். ஈப்போ தீமோர் உறுப்பினர் வோங் கா வோ இதை விடுவதாக இல்லை. நாடாளுமன்றத்தில் பதில் சொல்லும்போது கவனமாக இருக்கும்படி எம்.ஏ.சி.சி. தமக்கு பணித்திருப்பதாக ஹலிமா கூறினார் என அவர் குறிப்பிட்டார். இதனால் சற்று எரிச்சலடைந்த ஹலிமா, தன் வாயில் வார்த்தைகளைத் திணிக்க முயற்சிப்பதாக அவரைக் கண்டித்தார்.

பத்து கவான் தொகுதி உறுப்பினர் கஸ்தூரி பட்டுடனும் ஹலிமா சர்ச்சையில் சிக்கினார். தமக்கு வருத்தம் என்பதால் எதிர்க்கட்சியினரை புறக்கணிக்க வேண்டாம் என கஸ்தூரி கூறினார். தமது கேள்விக்கும் ஹலிமா பதில் அளிக்கவில்லை என்பது அவரது குற்றச்சாட்டாகும்.

‘‘தயவு செய்து அமருகிறீர்களா. எல்லா கேள்விகளுக்கும் நான் பதில் அளித்து விட்டேன்'' என்று கூறிய ஹலிமா, மித்ரா விவகாரம் எம்.ஏ.சி.சி.யிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் தம்மால் எதுவும் சொல்ல முடியாது என்றார்.